# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# Provincial Department of Education – Northern Province

## இரண்டாம் தவணைப் பரீட்சை 2023

| | | |
|---|---|---|
| தரம் :- 11 | பரதநாட்டியம் I&11<br>**Bharathanattiam I&11** | நேரம் :- 3 மணித்தியாலங்கள் |
| சுட்டெண்:............................... | 45 T | |

**கவனிக்க:**
- ❖ எல்லாவினாக்களுக்கும் விடை எழுதுக.
- ❖ 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1(, (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- ❖ உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை **(X)** இடுக.

01 வீரமான அசைவுகளை கொண்டு ஆடப்படும் நடனம்?

1. குறவன் குறத்தி நடனம் 2, வாள் நடனம்
3. வேடுவ நடனம் 4. கொழுந்து நடனம்

02. ஆதி தாளத்தின் மாத்திரைகள்?

1. 08 2. 24 3. 06 4. 32

03. நாட்டிய கச்சேரி அமைப்பு முறையில் அபிநயத்தை வெளிப்படுத்தும் உருப்படி

1.வர்ணம் 2.பதம் 3.சமதம் 4. ஜதீஸ்வரம்

04 பஞ்ச புராணத்தில் பச்சை நரம் போடச்செய்யும் பாணம்

1.தாமரை 2. முல்லை 3. மா 4. அசோகம்

05. “கீதகோவிந்தம்” என்றழைக்கப்படும் உருப்படி?

1. தில்லானா 2. அஷ்டபதி 3. கீர்த்தனை 4. ஜாவளி

06. அட தாளத்திற்குரிய குறியீடு?

1 1011 2. 101 3. 100 4. 1100

07. “சிரத்தா” என்பதன் கருத்து

1. உறுதி 2. வேகம் 3. ஆர்வம் 4. வடிவம்

08. “சித்தேந்திரயோகியால் உருவாக்கப்பட்டு அந்தணர்களால் வளர்க்கப்பட்ட நடனம்?

1. கதகளி 2. குஞ்சுப்புடி 3. கதக் 4. மோகினியாட்டம்.

09. சிலப்பதிகாரம் என்ற நூலின் ஆசிரியர்?

1. நந்திகேஸ்வரர் 2. இளங்கோவடிகள் 3. சோமநாதர் 4. விபுலானந்தர்

10. அவுணரை துர்க்கை மரக்காலால் மிதித்து ஆடிய கூத்து

1. பாலைக் கூத்து 2. பேடிக்கூத்து

3. மரக்கால் கூத்து 4. குடக்கூத்து

11. "நாட்டிய கலா கேசரி" என்ற விருதினைப் பெற்ற கலைஞர்

1. மீனாட்சி சுந்தரம் பிள்ளை 2. வழுவூர் இராமையாப்பிள்ளை

3. தஞ்சை நால்வர் 4. க. பொன்னையாப்பிள்ளை

12. வர்ணத்தில் பூர்வாங்கப் பகுதியில் இடம் பெறும் அங்கங்கள்

1. பல்லவி, அனுபல்லவி 2. சரணம், சரணஸ்வரம்

3. பல்லவி, அனுபல்லவி,முத்தாயிஸ்வரம் 4. பல்லவி, முத்தாயிஸ்வரம்

13. "துடி" ஏந்திய கை குறிப்பது

1 அழித்தல் 2.காத்தல் 3. படைத்தல் 4. அருளல்

14 "கோர்வையில் இறுதியில் வரும் அடவு"

1 மகுட அடவு 2. நாட்டவு

3. தாகதஜெம்தரிதா அடவு 4. தத்தெய் தாஹா அடவு

15. கதகளி நடனத்தின் ஒப்பனையில் "மினுக்கு" குறிக்கும் பாத்திரம்?

1. ராமன் 2. பிராமணர்கள் 3 இராவணன் 4. அனுமான்

16. குச்சுப்புடி நடனத்தில் தாம்பாளத் தட்டின் விளிம்பில் நின்று செம்பில் நீர் நிரப்பி தலையில் வைத்து ஆடப்படும் நடனம்

1. பதிஞ்ச ஆட்டம் 2. துரண 3. பாமா காலாபம் 4. பாலகோபால தரங்கம்

17. தித், தித். தெ, இதில் இடம் பெற்றுள்ள மாத்திரைகள்

1. 14 2. 8 3. 7 4. 12

18. சப்தத்தின் அங்கங்களை எவ்வாறு அழைப்பார்

1. சரணம் 2. கண்டிகை 3. அனுபல்லவி 4. பல்லவி

19. இராஜ வாத்தியம் என்றழைக்கப்படுவது

1. உடுக்கு 2. மிருதங்கம் 3. வீணை 4. தவில்

20. கண்ட ஜாதி திரிபுடை தாளம் எடுத்துக் கொள்ளும் எண்ணிக்கை

1. 08 2. 06 3.09 4. 10

21. ஜதீஸ்வரத்தின் ஆரம்பத்தில் இடம்பெறுவது

1. கோர்வை 2. தீர்மாணம் 3. ஜதி 4.அறுதி

22. சோடிப் பறவைகளை குறிக்கும் முத்திரை

1. கருடன் 2. பேருண்டம் 3. மயூரம் 4. மத்சயம்

23. மன்னர்கள், கற்றறிந்த சான்றோர்கள் முன்னிலையில் ஆடப்படுவது

1. ஆடல் 2. நடிப்பு 3. பொதுவியல் 4. வேத்தியல்

24. “சுக்கிரன்”என்னறழைக்கப்படும் கிரகம்

1.வியாழன் 2. செவ்வாய் 3. புதன் 4. வெள்ளி

25. கூத்தினை பயிற்றுவிப்பவர்

1. அண்ணாவியார் 2. சூத்திரதாரி 3. நட்டுவனார் 4. வாக்கியகாரர்

26. “ஜெயதேவரால்” இயற்றப்பட்ட உருப்படி

1.தில்லானா 2. ஜாவரி 3. வர்ணம் 4. அஷ்டபதி

27. இலங்கையின் சாஸ்திரிய நடனம்

1. கண்டிய நடனம் 2. பரதநாட்டியம் 3. கதகளி 4. குச்சுபுடி

28. எட்டுவித மெய்ப்பாட்டுணர்ச்சிகளை தன்னகத்தே கொண்ட அபிநயம்

1. ஆகார்யம் 2. சாத்வீகம் 3 ஆங்கிகம் 4. வார்சிகம்

29. “அணங்கன்” என்ற பெயரால் அழைக்கப்படுபவர்

1. மதுசூதணன் 2. மன்மதன் 3. சிவன் 4. முருகன்

30. இரு கைகளிலும் சிகர முத்திரை பிடித்து அபிநயிக்கப்படும் நவக்கிரக ஜாதிஹஸ்தங்கள்

1. சூரியன் - பிராமணர் 2. செவ்வாய் - வைசிகர்

3. வியாழன் - பிராமணர் 4. வெள்ளி - சத்திரியர்

31. ஸ்வரமாலை, ஸ்வர பல்லவி என்றழைக்கப்டும் நடன உருப்படி

1. பதம் 2. அலாரிப்பு 3. ஜதீஸ்வரம் 4. தில்லானா

32. ”சோபன” இசையை கொண்ட சாஸ்திரிய நடனம்

1. ஒடிசி 2. கதகளி 3. பரதநாட்டியம் 4. மணிப்புரி

33. நற்குணமுள்ள மாணவர்களாக இருப்பவர்களின் குணாதிசயங்களை குறித்து நிற்பது

1.சபா இலட்சணம் 2. கிண்கிணி இலட்சணம்

3. சிஷ்ய இலட்சணம் 4. குரு இலட்சணம்

34. 108 கரணங்களை ஆராய்ச்சி செய்து பரதநாட்டியத்தில் புகுத்தியவர்

1. மீனாட்சி சுந்தரம்பிள்ளை 2. வழுவூர் இராமையாபிள்ளை

3. க.பொன்னையாபிள்ளை 4. தஞ்சை நால்வர்

35. திணைப்புலம் காத்தல், தேன் எடுத்தல், பச்சை குத்துதல் போன்ற வாழ்க்கைப் பண்புகளை கொண்டு அமைந்த நடனம்

1. கொழுந்து நடனம் 2. மீனவ நடனம்

3 குறவன் குறத்தி நடனம் 4. வார் நடனம்

36. சிவன் முப்புரங்களை எரித்தபொழுது வெற்றிக் களிப்பினால் ஆடியது

1. சம்ஹார தாண்டவம் 2. முனி தாண்டவம்

3. ஆனந்த தாண்டவம் 4. திரிபுர தாண்டவம்

37. “ஷ்ருங்கலாயாம்” இது குறிப்பது

1. கயிறு 2. சங்கிலி

3. பெட்டி 4. சங்கு

38 அடிப்படைத் தாளங்கள் ஏழிலும் காணப்படும் அங்கம்

1. த்ருதம் 2. லகு

3. அனுத்ருதம் 4 புலுதம்

39. இந்திரனுக்குரிய ஹஸ்தத்தை எடுத்துக்கொள்ளும் தேவஹஸ்தம்

1.பிரம்மா 2. விஷ்ணு

3. அக்னி 4. சிவன்

40. “ஸ்லோகம்” என்பதன் தமிழ்ச் சொல்

1. வணக்கம் 2. வசந்தம்

3. நன்றி 4. பத்யம்

## பகுதி 11

முதலாம் வினாவையும் (கட்டாயமானது வேறு நான்கு வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

1. மிஸ்ர நடைக்குரிய செற்கட்டு யாது?
2. குச்சுப்புடி நடனம் எந்த மாநிலத்திற்குரிய நடனம் ஆகும்.
3. “தளாங்குதொம்” என்ற சொற்கட்டினை பிரயோகிக்கும் பாதபேதம் யாது?
4. அலாரிப்பு என்னும் உருப்படி அமைந்துள்ள இராகம் யாது?
5. நாட்டிய கச்சேரியில் சிகரம் போன்று விளங்கும் உருப்படி யாது?
6. கருத்தை புலப்படுத்தும் கைக்குறியீடு யாது?
7. காதல் தொடர்பான கதையை சித்தரிக்கும் கூத்து யாது?
8. ஒரு தாளத்தை ஒரு தடவை முழுமையாக போட்டு முடித்தல் எவ்வாறு அழைக்கப்படும்.
9. நாட்டியத்தில் இடம்பெறும் இரண்டு பெரும் பிரிவுகள் எவை?
10. சுத்த நிருத்த உருப்படிகள் இரண்டு தருக?

(12 புள்ளிகள்)

02. 1. நாட்டிய சம்பிரதாய கச்சேரி அமைப்பு முறையில் ஜதியும் ஸ்வரமும் சேர்ந்து ஆடப்படும் உருப்படி யாது?

2. இவ்வுருப்படியின் இலட்சணத்தை எழுதுக?
3. இவ்வுருப்படியின் முதலாவது கோர்வையினை தாளஅங்கக் குறியீட்டுடன் எழுதுக?

(2+4+6=12 புள்ளிகள்)

03. 1. கேரள மாநிலத்தில் ஆடப்படும் நடனம் யாது?

2. அந்நடனத்தின் தோற்றம், வளர்ச்சி, ஒப்பனை போன்றவற்றினை விளக்குக.

(2+10=12 புள்ளிகள்)

04. பின்வருவனவற்றிற்கு சிறு குறிப்பு எழுதுக.

1. பஞ்ச பாணங்கள்
2. சிஷ்ய இலட்சணம்

(6+6=12 புள்ளிகள்)

05. சங்கமருவிய கால வரலாற்றினை விளக்குக.

(12 புள்ளிகள்)

06. வழுவூர் இராமையாப்பிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாற்றினையும் காலப்பணியையும் தருக?

(12 புள்ளிகள்)

07. பின்வரும் முத்திரைகளுக்குரிய விநியோகங்களை தருக?

1. கபோதம்
2. கடகாமுகம்
3. சிவலிங்கம்

(3x4=12 புள்ளிகள்)